பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 13 புதன்கிழமை 30.08.2023 கதிர் 292

# உள்ளூராட்சி, மாகாணத் தேர்தல்களை உடன் நடத்த சிவில் சமூகம் வலியுறுத்து

## கொழும்பில் கூடி ஆட்சியாளர்களிடம் பல கோரிக்கைகள் முன்வைப்பு

உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்களை உடனடியாக நடாத்துதல் உள்ளிட்ட எட்டுக் கோரிக் கைகளை ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு பகிரங்கமாக முன்வைத்துள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியில் ஒன்று கூடிய ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பினர் உண்மையான மற்றும் சமமான பொருளாதார மீட்சியை உறுதி செய்வதற்காக, ஆட்சியாளர்களின் அடக்குமுறையை நிறுத்தவும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் மேற் கண்ட கோரிக்கையை முன்வைத்து அழைப்பு விடுத்துள்ளனர்.

ஜனநாயகத்திற்கு உறுதுணையாய் நிற்கும் தரப்புக்கள் என்று அறியப்படும் 'ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பின்' கூட்டத்தில் மதத் தலைவர்கள், சிவில் சமூக அமைப்பு களின் உறுப்பினர்கள், தொழில் வாண்மையாளர்கள், கல்வியியலா ளர்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள், ☞ 2

# இது ரகசியம் அல்ல!

சீன - இந்திய உறவுகளை இரு தரப் பினரையும் ஒருவருக்கு ஒருவர் கொம்புசீவி விட்டும் சீண்டிவிட்டும் தனக்குப் பயனுள்ள வகையில் வெற்றிகரமாகக் கையாள முடியும் என்று கொழும்பு எப்போதும் கருதி வருகின்றது. அத்தகைய ஒரு அயலுறவுக் கொள்கையின் ஊடாகவே நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும் என்றும் கொழும்பு அசைக்க முடியாத அளவுக்கு நம்புகின்றது. ஆனால், அது அவ்வளவு சுலபமல்ல என்பதை சீனாவின் ஆய்வுக் கப்பல் வருகை விவகாரம் வெளிப்படுத்துகின்றது.

சீன ஆய்வுக் கப்பலான 'ஷி யான் 6' இலங்கைக்கு வருவதற்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை என்று அயலுறவுத்துறை அமைச்சர் நேற்றுத் திடீரென அறிவித்தது. கடற்றொழில் அமைச்சின் கீழ் இயங்கும் நாரா எனப்படும் கடல்சார் ஆய்வு நிறுவனத்துடனும் பேராதனைப் பல்கலைக்கழகத்துடனும் இணைந்து கடலில் அய்வுகளை ☞ 2

# மேல் மாகாணம் வருகின்றன புதிய 200 மின்சார பஸ்கள்

## பொதுப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தத் திட்டம்

மேல்மாகாணத்தில் மின்சார பஸ்களை இயக்கும் முன்னோடித்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று வெகுஜன ஊடகத்துறை, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் ☞ 2

# எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்தால் பொதுத் தேர்தலில் வெல்லலாம்

## ஜி.எல்.பீரிஸின் கருத்து இது

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்பட்டால் பொதுத்தேர்தலில் வெற்றி பெறமுடியுமென நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இராஜகிரியவில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

துன்பங்களை அனுபவித்து வரும் மக்களைக் காப்பாற்றுவதற்கு தற்போதைய ஆட்சியாளர்களை அகற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கையின் கீழ் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை தொடங்குவதே புதிய ஆட்கியாளர்களின் முக்கிய பணியாக இருக்கும். இதுவே காலத்தின் தேவையாகும்.

நாட்டில் பேரிடர் ஏற்படும் நிலையில் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதுவே நேர்மையின் ☞ 2

# 4 மாதக் குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து மாசியப்பிட்டியில் பதற வைக்கும் கொள்ளை

## 25 லட்சம் ரூபாய் பெறுமதியான நகை, பணம், பொருகள் அபகரிப்பு

(ந.லோகதயாளன்.)

சண்டிலிப்பாய் மாசியப்பிட்டி பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை வீடுடைத்து உட்புகுந்த கொள்ளைக் கும்பல் 4 மாதக் குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து நகை, பணம் என 25 லட்சம் ரூபாய் பெறுமதிக்குக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

கணவன், மனைவி, இரு சிறுபிள்ளைகள் இருந்த வீட்டின் கதவினை உடைத்து உட்புகுந்த முகமூடி அணிந்து உட்புகுந்த கொள்ளையர்கள் பிறந்து நான்கு மாதமேயான குழந்தையின் கழுத்தில் கத்தி வைத்து அச்சுறுத்தி இந்தக் கொள்ளையை நடத்தியுள்ளனர்.

11 பவுண் தங்க நகை, 3 கைத் தொலைபேசிகள், 2 லட்சம் ரூபாய் பணம் , ஒரு மோட்டார் சைக்கிள் என சுமார் 25 லட்சம ரூபாய் பெறுமதிக்குக் கொள்ளை நடந்துள்ளது.

நால்வர் அடங்கிய கொள்ளைக் கும்பலே இந்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிசார் மேலதிக ☞ 2

# சுகாதார அமைச்சருக்கு பெரமுன ஆதரவளிப்பு

## நம்பிக்கையில்லா பிரேரணையை எதிர்க்கும்

பொது ஜன பெரமுன அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல மீதான நம்பிக் கையில்லாப் பிரேரணையை எதிர்த்தே வாக்களிக்கும் என்ற அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாஹர காரியவசம் தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள பொதுஜன பெரமுன காரியாலயத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு அவர் மேலும் தெரிவிக் கையில்,

சுகாதாரத்துறை அமைச்சருக்கு எதிரான ஐக்கிய மக்கள் சக்தியினர் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை அவசியமற்றது. தொழில்நுட்பம் மற்றும் பொது காரணிகளை அடிப்படையாக கொள்ளாமல் முறையற்ற வகையில் நம்பிக்கையில்லா பிரேரணையில் குற்றச்சாட்டுக்கள் உள்ள டக்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக் ஷவின் ஆட்சியின் போது சமையல் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு பிரதான பிரச்சினையாக காணப்பட்டது. கோட்டபய ராஜபக் ஷ பதவி விலகியதன் பினன்ர் எரிவாயு சிலிண்டர் வெடிப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

எரிவாயு சிலிண்டர் வெடிப்பு குறித்து ஆராய துறைசார் நிபுணர்களை உள்ளடக்கிய வகையில் விசேட குழு ஒன்று அப்போது நியமிக்கப்பட்டது. இந்த குழு சமர்ப்பித்த அறிக்கையை கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

எரிவாயு வெடிப்பு ☞ 2

# வெளிநாடு செல்ல எம்.பிக்களுக்கு தடை

(ந.லோகதயாளன்.)

அமைச்சர் கெகலியவை காப்பதற்காக அடுத்த மாத ஆரம்பத்தில் அரச தரப்பினர் எவரும் வெளிநாடு செல்லக் கூடாது என ஜனாதபதி ரணில் அதரடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெகலிய ரம்புக்கலவிற்கு எதிராக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் முன்வைத் துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பின்போது அரச ஆளும் தரப்பைச் சேர்ந்த சிலரும் புறக்கணிக்க தயாராகி வருவதாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதையடுத்து செபரெம்பர் மாத ☞ 2

# ஆங்கிலம் படித்த 5 எம்.பிக்கள்

தேசியமொழிகள் மற்றும் பயிற்சி நிறுவனத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆங்கில கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

தேசியப் பட்டியலில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், கேகாலை மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண் நாடாளுமன்ற உறுப்பினர், மற்றும் காலி, குருநாகல், மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே இந்தப் பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளனர்.

தொடக்கத்தில் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆங்கிலப் பாடநெறியை கற்க பதிவுசெய்திருந்தபோதிலும் இறுதியில் ஐந்து ☞ 2

# விடைத்தாள் திருத்த கொடுப்பனவை உடன் வழங்குவதற்கு நடவடிக்கை

## கல்வி அமைச்சர் அறிவிப்பபு

நீண்ட தூரங்கள் செலவழித்து சென்று திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக விடைத்தாள் திருத்துனர்களுக்கு 2,000 ரூபா உடனடிக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

விடைத்தாள் திருத்துனர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்ள தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

சாதாரண தரப் பரீட்சை மத்திய நிலையங்கள் நாடளாவிய ரீதியில் அமைக்கப்பட்டுள்ளது.

உயர் தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் மத்திய நிலையங்கள் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக் கையிலே அமைக்கப் பட்டுள்ளன.

அதனால் சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள் திருத்துனர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படாது போகலாம். எனினும், ஆசிரிய தொழிற் சங்கங்களினால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளை கருத்திற் கொண்டு அவர்களுக்கு இரண்டு நாட்கள் கடமை விடுமுறை வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. அதைவிட உடனடிக் கொடுப்பனவை அதிகரித்தல் தொடர்பாக அமைச்சரவைப் பத்திரமொன்று தற்போது முன் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 5400 பட்டதாரிகள் புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட வுள்ளனர். அதில் 1700 பட்டதாரிகளை தேசிய பாடசாலைகளுக்கும், எதிர்காலத்தில் ஆசிரிய சேவை கொள்கைக்கு இணாங்க திறந்த போட்டிப் பரீட்சையொன்றை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அவ்வாறே மலையகத்தின் ஆசிரியர் பற்றாக் குறையை நிரப்பு வதற்கு ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பளப் பிரச்சினையை முடிவிற்குக் கொண்டுவருதல் தொடர்பாக மாத்திரமன்றி, மாணவர்களின் கல்வி தொடர்பாக கூடிய கவனம் செலுத்துவதில் காணப்படும் குறைபாடு, கற்றல் செயற்பாடுகளை முழுமையாக மேற் கொள்வதற்காக அதிக காலம் கற்பித்துக் கூடிய அர்ப்பணிப்பைச் செய்வதற்கு, ஆசிரியர்களின் கவனத்தை செலுத்தாதுவிடின் மாணவர்களுக்கு பாடசாலைக் கல்வி தொடர்பாகக் காணப்படும் நம்பிக்கை குறைவடையக் கூடும் - என்றார்.

# ஆணைக்குழுவின் அனுமதியின்றி தர்மக்கேணி காணிகள் துப்புரவாம்

## மாவட்டச் செயலகத்திற்கு இங்குள்ள அதிகாரி அறிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ். மாவட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் பச்சிளைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் தர்மக்கேணி கிராமத்தில் உள்ள 120 ஏக்கர் நிலம் எமது அனுமதி இன்றித் துப்பரவு செய்யப்படுவதாக மாவட்டச் செயலத்திலுள்ள ஆணைக்குழு பிரதிநிதியால் எழுத்தில் அறிவிக் கப்பட்டுள்ளது.

பளை தரமக்கேணியில உள்ள காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆளுகையில் உள்ள நிலங்கள் கடத்த சில தினங்களாக காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் மாவட்ட நிர்வாகத்திற்கு தெரியாது வெளி மாவட்டங்களைச் சேர்ந்தோரால் துப்பரவுப் பணிகள் இடம்பெறுவதாகவே எழுத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை தொடரபில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் யாழ் மாவட்ட காணிச் சீர் திருத்த ஆணைக் குழுவின் உத்தியோகத்தரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது கடிதம் அனுப்பியதனை உறுதி செய்தார்.

புத்தளத்தைச் சேர்ந்த ஒரு நிறுவனத்திற்கு இந்த 120 ஏக்கர் நிலமும் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ளது. அந்த நிறுவனம் தலா 20 ஏக்கர் வீதம் 5 பேரிற்கு 100 ஏக்கரைப் பிரித்து வழங்கியுள்ளது.

இவ்வாறு ☞ 2

# அஸ்வெசும முதற்கட்ட கொடுப்பனவு வங்கியில் பணம் வைப்பிலிடப்பட்டது

20 இலட்சம் 'அஸ்வெசும' பயனாளிகளில், 15 இலட்சம் குடும்பங்களுக்கான கொடுப் பனவுகள் வழங்கும் பணிகள், கட்டம் கட்டமாக தொடங் கப்பட்டுள்ளதாகவும், முதற் கட்டமாக 689,803 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் 4.395 பில்லியன் ரூபா ஏற்கனவே வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய் தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது தகுதிபெற்றுள்ள 15 இலட்சம் 'அஸ்வெசும' பயனாளி குடும்பங்களுக்கு சுமார் 15 பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. தகுதி பெற்ற அனைவருக்கும் விரைவாக இக்கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

'அஸ்வெசும' தொடர்பான அனைத்து விவரங்களையும் 1924 என்ற துரித தொலைபேசி எண் மூலம் வார ☞ 2

# அரசியல் நிலவரம் குறித்து நேற்று ஐ.நா. பிரதிநிதி ஜேவிபியுடன் பேச்சு



ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி மார்க் என்ட்ரோ பிரெஞ், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்கவை இன்று முற்பகல் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலகத்தின் அபிவிருத்தி ஆலோசகர் மற்றும் வதிவிட ஒருங்கிணைப்பாளர் எட்வட்டும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுக்குழு உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது இலங்கையின் நிகழ்கால பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

அரசின் பொருளாதார இலக்குகள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் மக்கள் மேலும் துன்பத்துக்கு ஆளாகியுள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அநுரகுமார திஸாநாயக்க எம்.பி., அரசு தேர்தலை நடத்தாது மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துள்ளமை தொடர்பிலும் ஐ.நா. பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

தேர்தலை நடத்துவதற்குக் கட்டளையைப் பிறப்பித்த நீதிபதிகள் நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழுவுக்கு அழைக்கப்பட்டு அச்சுறுத்தப்பட்டுனர் எனவும், மக்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்குமுறைக்குட்படுத்தி ஜனநாயகவிரோதப்போக்கை அரசு முன்னெடுக்கின்றது எனவும் தேசிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

## இனி இது .....

மேற்கோள்வதறகாக அந்தக் கப்பலை இலங்கைக்கு வருமாறுகொழும்புதான் முதலில் அழைத்திருந்தது.

ஆனால், இதற்கு முன்னர் வந்த சீனாவின் விண்வெளி ஆய்வுக் கப்பலுக்கு இந்தியா வெளியிட்ட கடும் எதிர்ப்பு மற்றும் அதிருப்தியைத் தொடர்ந்து இந்தக் கப்பல் விவகாரத்தில் கொழும் பில் தடுமாறுவது வெளிப்படையாகவே தெரிகின்றது. அதனால்தான் ஷி யான் கப்பலை இலங் கைக்கு வருமாறு கோரிக் கைவிடுத்துவிட்டு, இப்போது கப்பல் வர அனுமதி வழங்க வில்லை என்கிறது அயலுறவுத்துறை அமைச்சு.

கப்பல் கொழும்புத் துறைமுகத் திற்குள் நுழைவதற்கான அனுமதிகேட்டு இலங்கைக்கான சீனத் தூதரகம் விண்ணப்பித்துள்ளது. அந்தக் கோரிக்கை ஆராயப்பட்டு வருவதாகவும்கப்பல்வருகை தரும் திகதிகள் தொடர் பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் வெளியிடப்படவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது,

வெளிவிவகார அமைச்சு மற்றும் நாரா நிறுவனம் விடுத்த கோரிக்கைக்கு அமைய குறித்த கப்பலுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு முன்னர் தெரிவித்திருந்தது. இதற்கு முன்னர் வந்த சீன விண்வெளி ஆய்வுக் கப்பலுக்கும் இப்படித்தான் சொல்லிக் கொண்டிருந்துவிட்டு கடைசியில் அனுமதி வழங்கியது இலங்கை. அதுபோன்றே இந்தக்கப்பலுக்கும் இறுதியில் நடக்கும். ஆனாலும், இந்திய மற்றும்மேற்குலகஎதிர்ப்புக்கு மத்தியில் சீனாவுடனான உறவுகளைதண்ணீருக்குள் நெருப்பைக்கொண்டு செல்வதைப் போன்றே நகர்த்த வேண்டியிருக்கிறது கொழும்புக்கு.

நீண்ட நாட்களுக்கு இப்படியே நடந்துகொள்வது என்பது பெரும் தலைவலியாக இருக்கும். எனவே இந்தியாமற்றும்மேற்கையும் சீனாவையும்எதிர்எதிர்தட்டில் வைத்து சமநிலையைப் பேணுவதன் மூலம் தனது பொருளாதார நலன்களை வென்றெடுக்கும் இலங்கையின் உத்தி விரைவில் அதன் நிம்மதியைக்கெடுத்தாலும்ஆச்சரியப் படுவதற்கில்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளூராட்சி,....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளம் தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய செல்வாக்காளர்கள் எனப் பலர் அங்கத்துவம் கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் இணைந்து நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை முன்வைத்தனர்.

கருத்துச் சுதந்திரம், தகவல் அறியும் உரிமை, கருத்து வேறுபாட்டு உரிமை, போராட்ட அல்லது எதிர்ப்பதற்கான உரிமை, ஒன்றுகூடுவதற்கானஉரிமை போன்ற, அரசமைப்பில் உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகளுக்கு எதிராகவும் ஜனநாயகத்திற்குஎதிராகவும் மேற்கொள்ளப்படுகின்ற அடக்குமுறை தொடர்பில் ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பானது தீவிர கரிசனையினை செலுத்தி வருகிறது.

மேலும், எதிர் அரசியல் கட்சியினர், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை குறிவைக்கும் வகையில் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் சர்ச்சைக்குரிய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் விதிகளையும்ஆட்சியாளர்கள் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், ஒலிபரப்பு ஆணையச் சட்டம் மற்றும் அரச சார்பற்ற தன்னார்வு தொண்டு நிறுவன சட்டம் போன்ற சட்டங்களின் ஒடுக்குமுறையான சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கான அரசின் அண்மைக்கால முயற்சிகள் ஜனநாயகத்திற்கு எதிரான அச்சுறுத்தல்களுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

ஜனாதிபதி, சபாநாயகர் மற்றும் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் அண்மைய கருத்துக்கள் நீதித்துறையின் சுதந்திரம் அல்லது சுயாதீனத்தினை குழிதோண்டி புதைக்க முயல்கிறது. 21ஆவது அரசமைப்பு திருத்தத்தின் மூலம் சுயாதீன ஆணைக் குழுக்கள்மீண்டும்நிறுவப்பட்டுள்ள அதேவேளை, தேர்தல் ஆணைக்குழுமற்றும்பொதுப் பயன்பாடுகள்ஆணைக்குழு உறுப்பினர்களை இலக்கு வைத்துஅண்மைக்காலமாக மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்கள் இந்த ஆணைக் குழுக்களை முடக்க மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளுக்கான எடுத்துக்காட்டுகளாகும்.

அதனடிப்படையில், நிதிப் பற்றாக்குறையினை ஒரு கேடயமாகபயன்படுத்திநாட்டு மக்களின் வாக்களிக்கும் இறையாண்மை மீறப்பட்டுள்ளது, இதுநம்பகத்தன்மை அற்ற விளக்கமாகும். தற்பொழுது குடிமக்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும்மாகாணசபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. அதேபோன்று இந்த அதிகார சபைகள் நாட்டின் ஜனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் தேர்தல்களினால் தேர்ந்தெடுக்கப்படாத அதிகாரிகளினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இது விரைவாக கவனிக்கப்படாவிடின் இலங்கை ஜனநாயக நாடு என்றவரையறை கேள்விக்குறியாகிவிடும்.

பொருளாதாரநெருக்கடியில் இருந்து இலங்கையை மீட்டெடுக்க அதன் மூல காரணமான மோசமான நிர்வாகம் மற்றும் ஊழல் ஆகியவற்றை நிவர்த்தி செய்வதுஅவசியமாகும். இந்த அடிப்படை பிரச்சினைக்கு தீர்வு காணப்படாவிடின், முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வும் பொருளாதார மீட்சிக்கு இடையூறு விளைவிக்கும் ஒரு சிக்கலான முதலீட்டுச்சூழலாகஇலங்கை தொடர்ந்தும் கருதப்படும்.

ஊழலை தடுக்கவும் நல்லாட்சியை உறுதிப்படுத்தவும் அரச நிர்வாக செயற்பாடுகளில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வது அவசியமாகும். மக்கள் தமது பிரதிநிதிகளையும் பொதுவளங்களின் பொறுப்புவாய்ந்தவர்களையும் பொறுப்புக்கூறவைக்க, பொதுமக்கள் தங்களின் ஜனநாயக உரிமைகளை பயன்படுத்தக்கூடியதாக காணப்பட வேண்டும்.

ஓர் உண்மையான ஜனநாயகமுறைமையானது பொதுமக்கள் தமது பிரதிநிதிகளை தேர்தெடுக்கவும் வாக்களிக்கவும் அவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தினை ஏற்படுத்தும் அனைத்து அரச தீர்மானங்கள்தொடர்பில்அறிவிக்கப்படவும்அதேபோன்றுதீர்மானங்களில் பங்கேற்றுக் கொள்ளவும்அவற்றுக்குஆட்சேபனை தெரிவிக்கவும் தமது கருத்துக்களைதெரிவிக்கவும், ஒன்று சேரவும் மற்றும் தீர்மானங்க ளுக்கு எதிராக அழுத்தம் கொடுக்கவும் முடியுமாக இருத்தல் வேண்டும்.

மக்களின் நலனுக்காக செயல்படும்ஆட்சி, பொருளாதாரத்தினை மேம்படுத்த தனது முயற்சியில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொது கண்காணிப்புக்குத் தன்னை வெளிப்படுத்தத் தயங்காது. இந்தக் கொள்கைகளுக்கு இணங்க, ஜனநாயகத்திற்கான சிவில் சமூகக் கூட்டமைப்பானது ஜனநாயகத்தின் அடிப்படை கொள்கைகளை நிலைநிறுத்தவும் பாதுகாக்கவும் உடனடி நடவடிக்கைகளைமேற்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறது:

அதனடிப்படையில்,

» சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களைஉரியநேரத்தில் நடத்துவதை உறுதிசெய்தல். உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாணசபை தேர்தல்களை உடனடியாக நடாத்துதல்.

» கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடலுக்கான உரிமை மற்றும் தகவல் அறியும் உரிமை போன்ற அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுதல்.

» பொதுமக்களின் ஜனநாயகம் மற்றும் சிவில் சமூக செயல்பாடுகளுக்கான சூழலை உருவாக்குதல்.

» பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளில் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பங்களிப்பினை உறுதி செய்தல்.

» ஆட்சியின் வெளிப்படைத்தன்மைமற்றும் பொறுப்புக்கூறலூடாகப் பொதுக் கண்காணிப்பினை உறுதி செய்தல்.

» சுயாதீன ஆணைக் குழுக்கள் தமது செயற்பாடுகளை சுயமாக மற்றும் திறம்பட நிறைவேற்ற அதிகாரமளித்தல்.

» ஊழலுக்கு எதிரான அத்தியாவசிய சீர்திருத்தங்களை செயல்படுத்த சிறந்த முயற்சியினை மேற்கொள்ளல்.

» தண்டனை வழங்கப்படாதஊழல்செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர கடந்த கால மற்றும் தற்போதைய ஊழல்சார் செயற்பாடுகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்

போன்றகோரிக்கைகளைக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

## மேல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்ததாவது:

உத்தேசதிட்டத்தின் கீழ் இயக்கப்படவுள்ள மின்சார பஸ்களின்எண்ணிக்கையை சுமார் 200 ஆக அதிகரிப்பது மிகவும்பொருத்தமானதென அமைச்சரவை அடையாளம் கண்டுள்ளது. இதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நன்மைகளை உறுதிப்படுத்துவதன் மூலம் இந்த பஸ்களினால் அதிக வீதிகளுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகளை வழங்க முடியும்.

இதன்படி, மேல் மாகாணத்தை உள்ளடக்கிய இலங்கை போக்குவரத்து சபையின் சார்பில் இயங்குவதற்கு அரசதனியார்கூட்டுத் திட்டமாக 50 மின்சார பஸ்களை கொள்வனவு செய்வதற்கு கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதிவழங்கப்பட்டுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ், சிங்கப்பூர், கொரியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் பொதுப் போக்குவரத்திற்கு மின்சார பேருந்துகளைப் பயன்படுத்துகின்றன. இலங்கையில் மின்சார பஸ்களுக்கு பணம் முதலீடு செய்ய முடியாததனால், இலங்கைபோக்குவரத்துசபை சர்வதேசநிறுவனங்களுடன் இணைந்து, மேல் மாகாணத்தில் முன்னோடி திட்டமாக மின்சார பஸ்களை பயன்படுத்த உள்ளன.

வெளிநாட்டு முதலீட்டாளர்களின் முதலீட்டினூடாக 200 மின்சார பஸ்களை இலங்கைக்குகொண்டுவந்து, நாடு முழுவதும் மின்சார சார்ஜிங் நிலையங்களை நிறுவி, இலங்கை போக்குவரத்து சபையின் கீழ்இவைபயன்படுத்தப்படும்.

அதனூடாக பெறப்படுகின்ற வருமானத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின்முதலீட்டைசெலுத்த நடவடிக்கை எடுக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகளை செலுத்தி முடித்ததன் பின்னர் அந்த பஸ்கள் இலங்கை போக்குவரத்து சபையிடம் ஒப்படைக்கப்படும் - என்றார்.

## ஆணைக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலங்களைப் பெற்ற அனைவரும் தென் இலங்கையைச்சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தை போன்றே தற்போது மருந்து தட்டுப்பாடு, தரமற்றமருந்துகொள்வனவு தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு சுகாதாரத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல பொறுப்புக் கூற வேண்டிய தேவை கிடையாது.

சுகாதாரத்துறைஅமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினர் கொண்டு வரவுள்ள நம்பிக்கையில்லா பிரேரரணைக்கு எதிராகவே வாக்களிப்போம்.

கட்சியின்தேசியஅமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆகவே நம்பிக்கையில்லா பிரேரணையை பெரும்பான்மைப் பலத்துடன் தோற்கடிப்போம் - என்றார்.

## 4 மாதக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## எதிர்க்கட்சிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிபலிப்பு என்றாலும் தற்போதுநிலைமைமுற்றிலும் மாறுபட்ட ஒன்றாகவே காணப்படுகிறது.

தற்போதைய ஆட்சி உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்புச் செய்கின்றோம். பெயரில்சேமலாபநிதி மற்றும்நம்பிக்கைநிதியினை கொள்ளையடித்து வருகிறது.

இதன்படி, ஆட்சியாளர்களின்திறமையின்மைக்கு மக்கள்தான் விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. சபாநாயகரின் நடவடிக்கையினால் ஜனநாயகம் மற்றும்சட்டவாட்சி அழிக்கப்பட்டுள்ளது.

புதிய ஆட்சியின் கீழ் இந்தநடவடிக்கைகள்மற்றும் தீர்மானங்கள் மாற்றப்பட வேண்டும். ஆணையில்லாத ஆட்சியாளர்களிடம் இருந்து உணர்வு மற்றும் சமூக ஒருமித்த தன்மையை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

அரசின் நிர்வாகக் குறைபாடுகள் காரணமாக விவசாய நிலங்கள் அழிந்து வருவதுடன், நியாயமான இழப்பீட்டை வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

அமைச்சரவை அமைச்சர்களின் கொள்கை முரண்பாடுகள் காரணமாக பொது மக்கள் அநாதரவாகியுள்ளனர். தொழிலாளர் சட்டங்களை மாற்றி உழைக்கும் மக்களின் உரிமைகளைப் பறிக்கும் திட்டங்களுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் செயற்படு கின்றன - என்றார்.

## ஆங்கிலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் மாத்திரமே பயிற்சியை நிறைவுசெய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தவிர, 42 நாடாளுமன்றஊழியர்களும்ஆங்கில மொழிப் பாடத்தைப் பூர்த்தி செய்துள்ளனர்.

## வெளிநாடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற அமர்வு தினமான எதிர்வரும் 5, 6, 7 மற்றும் 8ஆம் திகதிகளில் ஆளும் தரப்பு உறுப்பினர்கள்அனைவரும் வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அமைச்சர்கள்மற்றும்ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அதிரடி உத்தரவை விடுத்துள்ளார்.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் மற்றும் வாக்கெடுப்பு இந்த நாட்களில் நடைபெறவுள்ள நிலையிலேயே ஜனாதிபதி மேற்கண்ட உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த விடயம் தொடர்பில்அமைச்சர்களுடன் கலந்துரையாடி ஏனையவர்களுக்கும் தீர்மானத்தை தெரியப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாட்கள் தேவை என ஐக்கிய மக்கள் சக்தி சபாநாயகரிடம் கோரியுள்ளது. என்றாலும், ஒருநாள் அல்லது இரண்டு நாட்கள்தான்பிரேரணையை விவாதிக்க முடியும் என ஆளுங்கட்சி கூறியுள்ளது.

ஆளுங்கட்சியின் உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து விலகியிருந்தால் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அல்லது திங்கட்கிழமை சபாநாயகர் தலைமையில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் இறுதி தீர்மானங்கள் எடுக்கப்படும் எனவும் அரசின் தகவல் அறியும் வட்டாரங்களில் தெரியவருகிறது.

## அஸ்வெசும ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும். ஊனமுற்றோர், முதியோர், சிறுநீரக நோயாளர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

போலியான தகவல்களைச் சமர்ப்பித்து 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள் பெறப்பட்டிருந்தால் அதனை மீளப் பெறுவதற்கு 'அஸ்வெசும' நலன்புரிச் சட்டத்திலேயே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவ்வாறு நடைபெற்றிருந்தால், வழங்கப்பட்ட பணத்தை மீளப்பெற்றுக்கொள்ளவதற்கு தயங்க மாட்டோம்.

'அஸ்வெசும' பயனாளிகளில்முதல்குழுவினருக்கு அரசு என்ற வகையில், கொடுப்பனவுகளை வழங்க முடிந்ததுள்ளது. அதில் 689,803 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் சுமார் 4 ஆயிரத்த0 395 பில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளோம்.

தற்போது ஜூலை மாதத்திற்கான கொடுப்பனவு வழங்கப்படுகிறது. ஓகஸ்ட் மாதத்திற்கான கொடுப்பனவு மிக விரைவில் வழங்கப்படவுள்ளது. எதிர்காலத்தில் ஒவ்வொரு மாதமும் குறித்த ஒரு நாளில் இந்தக் கொடுப்பனவை வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.

மேலும், குறைந்த வருமானம் பெறும் குடும்பத்தைச் சேர்ந்த முதியோர், சிறுநீரக நோயாளிகள் மற்றும் அங்கவீனர்களுக்கு வழங்கப்படும் நலன்புரிக் கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன - என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**
**076 3983858**
**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com






# 30 ஆம் திகதி மட்டக்களப்பில் ஜனநாயகப் போராட்டம் வலிசுமந்த மக்களுக்கு துணையாக வருமாறு அழைப்பு

## முன்னாள் எம்.பி. ஸ்ரீநேசன் கோரிக்கை



யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகளாகியும் உண்மைகள் கண்டறியப்படவில்லை மாறாக, காணாமல் ஆக்கிய குற்றவாளிகளைப்பாதுகாக்கும்நிலையே இலங்கையில்காணப்படுவதாகமுன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் குற்றச்சாட்டியுள்ளதுடன் தமிழ் உறவுகள் அனைவரும் எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

காணாமல்ஆக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச தினம் 30.08.2023 அன்று உலகளாவிய ரீதியில் அனுட்டிக்கப்படவுள்ளது. அன்றைய தினம் மு.ப 9.00 மணியளவில் மட்டக்களப்பிலும் அது தொடர்பான ஜனநாயக ரீதியான போராட்டம், கல்லடிப் பாலத்தில் இருந்து,காந்திப்பூங்கா வரை நடைபவனியாக மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகளாகியும் உண்மைகள் கண்டறியப்படவில்லை. நீதி வழங்கப்படவில்லை. இனியும் காணாமல் ஆக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கான உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வு காணப்படவில்லை. மாறாக, காணாமல் ஆக்கிய குற்றவாளிகளைப் பாதுகாக்கும் நிலை இங்கு ஏற்பட்டுள்ளதோ என்று மக்கள் ஐயப்படுகின்றனர். அந்தக் குற்றவாளிகளுக்குப் பதவிகள், பதவியுயர்வுகள் வழங்கி கௌரவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதோ என்று சந்தேகிக்க வேண்டியுள்ளது. எனவே நீதிக்கான உள்நாட்டுப் பொறிமுறையைத் தமிழ் மக்கள் நம்ப முடியாத நிலையில், சர்வதேச நீதிப் பொறிமுறையை எமது உறவுகள் கோர வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்தநீதியானஉரிமைப்போராட்டத்தில் வலிசுமந்த மக்கள் அனைவரும் கலந்து கொள்வோம். பார்வையாளர்களாக அல்லாமல்,பங்காளிகளாகி ஜனநாயக ரீதியாகப்போராட வாருங்கள் என்று அன்பாக அழைக்கின்றோம் என தெரிவித்தார். (05)

# தென்கிழக்குப் பல்கலையில் முதல் ஆங்கில பேராசிரியர்

பேராசிரியர் ஏ.எம்.எம். நவாஸ், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் முதல் ஆங்கிலப் பேராசிரியராவதோடு, பேராசிரியர் ரைஹானா ரஹீமைத் தொடர்ந்து இலங்கை முஸ்லிம்களில் இரண்டாவது ஆங்கிலப் பேராசிரியரும் ஆவார்.

1969 ஜூலை மாதம் பிறந்த அப்துல் மஜீட் முகம்மது நவாஸ், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேரவை-யால் 29.09.2021 முதல் ஆங்கிலப் பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மருதமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது தந்தை, மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளிவாசலின் தலைவர் ஆகவும், மருதமுனை பொது நூலகத்தின் நிறுவுநரும், மருதமுனை கல்முனை பொது நூலகத்தில் நூலகராகவும் பணியாற்றியவர் ஆவார்.

பேராசிரியர் நவாஸ் தனது ஆரம்பக் கல்வியை அல்-மனார் மத்திய கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை மருதமுனை ஷம்ஸ்மத்தியகல்லூரியிலும் பெற்றார். அங்கு அவர் 1983 இல் கல்விப் பொது தராதர சாதாரணபரீட்சையில்சிறந்த பெறுபேறுகளையும், 1987 இல் விஞ்ஞானப் பிரிவில் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளையும்பெற்றார். 1990 ஆம் ஆண்டு கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட போட்டித் தேர்வில் சிறப்பு தேர்ச்சி பெற்று ஆங்கில ஆசிரியராகநியமிக்கப்பட்டார்.

இவர் 1995 டிசெம்பரில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விவசாய விஞ்ஞான இளமாணிப் பட்டத்தைப் பெற்றார். அதனைத் தொடர்ந்து, அவர் 1996 இல் விவசாய பீடத்தில் தற்காலிகஉதவிவிரிவுரையாளராக நியமிக்கப்பட்டார்.

மேலும் 1997 ஏப்ரல் மாதம் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிரந்தர ஆங்கிலபயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர், 1997 மே மாதம், அதே பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

மேலும் 2005 இல் உறுதிப்படுத்தப்பட்ட விரிவுரையாளராக பதவி உயர்வுபெற்றஇவர்சிரேஷ்ட விரிவுரையாளர் ஆகிய பதவிகளுக்கு முறையே 2012 மற்றும் 2016 இல் பதவி உயர்த்தப்பட்டார்.

தற்போது அவர் 26 ஆண்டுகளுக்கும் மேலான பல்கலைக்கழக கற்பித்தல் அனுபவத்தையும், 7 வருட பாடசாலைக் கற்பித்தல் அனுபவத்தையும் பெற்றுள்ளார். (05)

# நண்பர்களுடன் விறகு தேடச் சென்ற இளைஞன் நீரில் மூழ்கி பரிதாப சாவு







லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வோல்ட்ரீம் தோட்டத்தில் காட்டுக்கு விறகுதேடச்சென்றஇளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி பலியாகியுள்ளார்.

தலவாக்கலை, கொத்மலை நீர்த்தேக்கத்துக்கு நீரேந்திச்செல்லும் எல்ஜின் ஓயாவில் மூழ்கியே அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த அனர்த்தத்தில் லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென் கூம்ஸ் தோட்டத்தில் கீழ் பிரிவைச் சேர்ந்த 20 வயதுடைய பிரபாகரன் கஜேந்திரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த தோட்டத்தில் உள்ள மேலும் இரு இளைஞர்களுடன் இணைந்து இவர் விறகு தேடச்சென்றுள்ளார். அவ்வேளையில்எல்ஜின்ஓயாவில் சிலர் குளித்துக்கொண்டிருந்துள்ளனர்.

அவ்வேளையில் குறித்த இளைஞனும் ஓயாவில் இறங்கியுள்ளார். அவ்வேளையிலேயே நீரில் மூழ்கியுள்ளார்.

நீரில் மூழ்கி காணாமல் போன இளைஞனை பொலிஸாரும், பிரதேச மக்களும் இணைந்து தேடி மீட்டனர்.

இதுதொடர்பானமேலதிக விசாரணைகளைலிந்துலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நாய் உண்ணி காரணமாக காலி பாடசாலைக்கு பூட்டு

நாய் உண்ணி காரணமாககாலியில்உள்ளபலப்பிட்டி ரேவததேசியபாடசாலையின் ஆரம்பப் பிரிவு 28, 29 ஆம் திகதிகளில் மூடப்பட்டுள்ளது.

பாடசாலை முழுவதும் நாய் உண்ணி மற்றும் கண்ணுக்குத் தெரியாத உண்ணிகளும் இருப்பதாக பாடசாலையின்அதிபர்தாமரா குமாரி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்.

மருத்துவரின் அறிவுரைக்குஅமையமருந்துகளை பயன்படுத்திஉண்ணிகளை அழிக்கும் நடவடிக்கைள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி இரண்டு நாள்களுக்கு பாடசாலை மூடப்பட்டதாக அதிபர் மேலும் தெரிவித்தார். (05)

# குழந்தைகளுக்கு ஆங்கில முகாம்

கல்முனை கல்வி வலய கல்முனை நகர் இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் வரலாற்றில் முதல் தடவையாக 'ஆங்கில மொழி மேம்பாட்டு கல்வி' நிறுவனம் உருவாக்கப்பட்டு அதன் வருடாந்த சிறுவர் ஆங்கில பயிற்சி முகாமும், பரிசளிப்பு நிகழ்வும் பொத்துவில் நாவலாறுப்பிரதேசத்தில் நடைபெற்றது.

இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் அதிபர் ஏ.ஜி.எம்.றிசாத்தின் வழிகாட்டலிலும் எல்டா நிறுவனத்தின் பணிப்பாளர் டீ.கே.எம். மௌசீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆங்கில விருத்திக்குப் பொறுப்பாக இருந்து செயற்படும் பயிற்சி பெற்ற வளவாளர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள் மற்றும்பெற்றோர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு ஆங்கிலப் பாடநெறியில் அதிக பயிற்சிகளைப்பெற்றுத் தந்ததுடன் மாணவர்களின் ஆளுமைகளையும் அவர்களது உள்ளார்ந்த திறமைகளையும் வெளிக்கொணர்வதற்கு வாய்ப்பபை ஏற்படுத்தியது. அத்துடன் முகாமில் பங்குபற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களும் போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற் றிக் கேடயங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (05)

# காணிகளை கைப்பற்றி விகாரை அமைப்பதுவும் பயங்கரவாதமே

## அருட்தந்தை மா.சத்திவேல் கருத்து



பௌத்தர்களே இல்லாத தமிழர் பிரதேசங்களில் காணிகளை கைப்பற்றி பௌத்த மத சின்னங்களை நிறுவுவது பயங்கரவாதம் என அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

பௌத்தமயமாக்கல் நடவடிக்கை தொடர்பாக வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே சமூக நீதிக்கான செயற்பாட்டாளர் அருட்தந்தை மா.சத்திவேல் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாகக் காவி உடை தரித்த ஒரு சிலரின் நடவடிக்கைகள் தனி மனித சுதந்திரத்துக்கும், நாட்டின் சட்டம் ஒழுங்குக்கும், நிர்வாகத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாக கூறியுள்ளார். மாகாண ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இவ்வாறன செயற்பாடுகள் இடம்பெறுவதை நாட்டின் சட்டம் அங்கீகரிக்கப் போகின்றதா என்றும் அருட்தந்தை மா.சத்திவேல் கேட்டுக்கொண்டுள்ளார்.

பௌத்தத்தின் பெயரால் நீதித் துறைக்கும், நாடாளுமன்ற நடவடிக் கைகளுக்கும் ஏனைய சமய தலைவர்களுக்கு எதிராக செயற்படுவதையும் எந்த சட்டம் அங்கீகரிக்கின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, நாட்டில் மீண்டும் இனவாத மதவாத வன்முறைகள் பலவந்தமாகத் தூண்டப்படுகின்றதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கும் அடையாள அட்டை வழங்கும் திட்டம்

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தால் தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியாதவர்களுக்கு அடையாள அட்டை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்த அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரதீப் சபுதந்தி குறிப்பிட்டார்.

அதன்படி 40 வயது பூர்த்தியடைந்தவர்களுக்காக இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு, ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

இதன்படி கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிரந்தர வதிவிடத்துடன் வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட 40 வயதுக்கு மேற்பட்ட இலங்கைபிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# அங்கப் பிரதிஷ்டை செய்தவர் செல்வ சந்நிதியில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் - தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் அங்கப் பிரதிஷ்டை செய்த ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னையா சுரேஷ் குமார் என்ற 57 வயதானவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் உயிரிழப்புக்கான காரணம் மரண விசாரணையின் பின்னரே தெரியவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# நினைவு இழப்பு டிமென்டியா நோயால் 4 வீத இலங்கையர்கள் பாதிப்பு

இலங்கையின் சனத்தொகையில் 4 வீதமானவர்கள் நினைவு இழப்பு எனப்படும் டிமென்டியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என மனநல வைத்தியநிபுணர்கள்தெரிவிக்கின்றனர்.

வயோதிபத்துடன் மூளை செல்கள் அழிவதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக மனநல வைத்திய நிபுணர் என்.குமாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

முறையான உணவுப் பழக்கவழக்கங்களைகடைப்பிடிப்பதன்மூலமும், தொடர்ந்து உடற்பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலமும், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களை கட்டுப்படுத்துவதன் மூலமும் இந்த நிலைமையை குறைக்க முடியும் என மனநல வைத்திய நிபுணர் என்.குமாநாயக்க தெரிவித்துள்ளார். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அரசுத் தலைவர் தேர்தல் சூடு தொடங்கிவிட்டது

அடுத்த ஆண்டு மூன்றாம் காலாண்டி நடக்கவுள்ள அரசுத் தலைவர் தேர்தலுக்கான சூடு இப்போதே தொடங்கிவிட்டது. களத்தில் தற்போது வரைக்கும் மூன்றுமுக்கியவேட்பாளர்கள்அறிவிக்கப்பட்டுவிட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி தமது வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கதான் என்றும் ஜேவிபி தமது வேட்பாளர் அனுரகுமார திஸநாயக்க என்றும் ஐக்கிய மக்கள் சக்தி தமது வேட்பாளர் சஜித் பிரேமதாஸ என்றும் அறிவித்திருக்கின்றன.

மற்றொரு முக்கிய கட்சியான பொது ஜன பெரமுன மட்டுமே இன்னமும் தமது வேட்பாளரை அறிவிக்க வில்லை. இருந்தாலும் அந்தக் கட்சியும் அரசுத் தலைவர் தேர்தலை எதிர்கொள்வதற்கான தீவிரத் தயார்ப்படுத்தலில் இறங்கியிருக்கிறது. யார் வேட்பாளர் என்பதில் கட்சிக்குள் இன்னும் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. ஒரு தரப்பினர் பஸில்வேட்பாளராகவேண்டும்என்றும்ஒருதரப்பினர் சமல் வேட்பாளராகவேண்டும் என்றும் மற்றொரு தரப்பினர் நாமல் வேட்பாளராகவேண்டும் என்றும் நான்காவது தரப்பினர் ரணிலை ஆதரிக்கவேண்டும் என்றும் பிளவுபட்டு நிற்பதால் அந்தக் கட்சியின் வேட்பாளர் அறிவிப்பு தேர்தல் அணிமிக்கும்போதே வெளிப்படக்கூடும்.

இருந்தாலும் அனைத்துத் தரப்புகளும் அரசுத் தலைவர் தேர்தலை நோக்கிய தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இதற்கிடையில் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்தி இலங்கையின் மக்களாட்சிப் பாரம்பரியத்தைக் காக்கவேண்டும் என்றும் பொதுச் சமூகக் கூட்டமைப்பு கொழும்பில் கூடி ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளது.

— கருத்துச் சுதந்திரம், ஒன்று கூடலுக்கான உரிமை மற்றும் தகவல் அறியும் உரிமை போன்ற அடிப்படை உரிமைகளை நிலைநாட்டுதல்.

— மக்களாட்சி மற்றும் சிவில் சமூக செயல்பாடுகளுக்கான சூழலை உருவாக்குதல்.

— பொருளாதார மீட்சிக்கான செயற்பாடுகளில் பொதுமக்களின்கருத்துக்கள்மற்றும்பங்களிப்பினை உறுதி செய்தல்.

— ஆட்சியின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலூடாகப் பொதுக் கண்காணிப்பினை உறுதி செய்தல்.

— சுயாதீன ஆணைக்குழுக்கள் தமது செயற்பாடுகளைசுயமாகமற்றும்திறம்படநிறைவேற்ற அதிகாரமளித்தல்.

— ஊழலுக்கு எதிரான அத்தியாவசிய சீர்திருத்தங்களைசெயல்படுத்தசிறந்தமுயற்சியினை மேற்கொள்ளல்.

—தண்டனை வழங்கப்படாத ஊழல் செயற்பாடு களை முடிவுக்கு கொண்டுவர கடந்த கால மற்றும் தற்போதைய ஊழல்சார் செயற்பாடுகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய கோரிக்கைகளையும் பொதுச் சமூகக் கூட்டமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அரசுத் தலைவர் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியிருப்பதையடுத்தே பொதுச் சமூகக் கூட்டமைப்பும் தேர்தல் தொடர்பில் கூடி ஆராய்ந்து இந்தக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. 2015இல் ராஜபக்சவை ஆட்சியிலிருந்து அகற்றி மைத்திரி – ரணில் கூட்டை அதிகாரத்திற்குக் கொண்டு வருவதற்கான பொது மக்கள் கருத்தை உருவாக்குவதில் இந்தத் தரப்பு அப்போதும் முக்கிய பங்காற்றியிருந்தது. மீண்டும் அது இப்போதும் தேர்தலைமையமாக வைத்துக் களமிறங்கியிருப்பது அரசுத் தலைவர் தேர்தல் சூடு இப்போதே தொடங்கி விட்டதையே நன்குணர்த்துகின்றது.



## ரூ. 2 கோடி மோசடி செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எதுவும் இல்லை

ந.லோகதயாளன்



ஆசிரியர்களின் சம்பளம் எனவும், கடன் தவணைக் கொடுப்பனவுகள், படிகள் எனவும் 2 கோடியே 20 லட்சம் ரூபாயை மோசடி செய்த இரு அலுவலர்களுக்கு எதிராக எந்தவித சட்ட நடவடிக்கையையும் எடுக்கப்படாத அவலம் வவுனியா வடக்கு கல்வித் திணைக்களத்தில் நீடிக்கிறது.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் 2013 ஆம் ஆண்டில் இருந்து 2021ஆம் ஆண்டு வரை இந்த மோசடி இடம் பெற்றிருப்பதாக மாகாண பிரதம செயலாளர் அலுவலகம் விசாரணைகளை மேற்கொண்டு உறுதி செய்தபோதும் அதனைச் செய்த அலுவலர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதுடன் அந்தப் பணத்தை மீளச் செலுத்துவதற்கான எந்தவித முயற்சிகளும்கூட எடுக்கப்படவில்லை.

வவுனியா வடக்கு கல்வி வலயத்திலே 2013 ஏப்பிரல் முதல் 2015 மார்ச் வரையான இரண்டு ஆண்டுகளில் 15 லட்சத்து 57 ஆயிரத்து 970 ரூபாய் அங்கு பணியாற்றிய அலுவலர் ஒருவரால் மோசடி செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான கொடுப்பனவில் இருந்து சிறு சிறு தொகையாக வெட்டி அவற்றைத் தனது 4 வங்கி கணக்கு இலக்கங் களுக்கு வைப்புச் செய்வதன் ஊடாக அவர் அந்தப் பணத்தை கையாடல் புரிந்துள்ளார்.

அவருக்குப் பின்னர் அந்தப் பதவிக்கு வந்த மற்றொரு ஊழியரும் அதேவழியை பின்பற்றி மோசடியில் ஈடுபட்டுள்ளார். முதல் நபரைவிடவும் இன்னும் ஒருபடி மேலே சென்று அவர் கோடிகளில் மோசடி செய்துள்ளார்.

இரண்டாவது அலுவலர் 2018 ஜூன் முதல் 2020 ஒகோபர் வரையான 28 மாத காலப் பகுதியில் தனது 6 வங்கி கணக்குகள் ஊடாகவும் 2 கோடியே 4 லட்சத்து 27 ஆயிரத்து 459 ரூபாயை மோசடி செய்துள்ளார் என்று திணைக்கள மட்ட விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2019 மே மாதம் வங்கியில் இருந்து திருப்பி அனுப்பப்பட்ட 5 லட்சத்து 72 ஆயிரத்து 587 ரூபாயையும் இதே உத்தியோகத்தர் தனது கணக்கிற்கும் வேறு இரு உத்தியோகத்தர்கள் கணக்கிற்கும் பங்கிட்டு வைப்புச் செய்து மோசடி செய்துள்ளார்.

இவ்வாறு மோசடி செய்த உத்தியோகத்தர் தான் பணியாற்றிய 3 ஆண்டுகளில் பெற்ற அரச சம்பளம் 20 லட்சம் ரூபாவாகவும் மோசடி மூலம் திரட்டிய பணம் 2 கோடி ரூபாவாகவும் காணப்படுகின்றது.

இரண்டு கோடி ரூபாவை மோசடி செய்தவர் வலய கல்வி அலுவலகத்தில் தான் பணியற்றும் அதே பொறுப்பில் முன்பு பணியில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற இரு உத்தியோகத்தர்களின் பெயரிகளிலும் சுமார் 13 லடசம் ரூபாயை வைப்புச் செய்துள்ளார் என்பதும் விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது.

2013 முதல் இந்த மோசடி தொடங்கியிருந்தது. அதனைக் கண்டுபிடிக்கும் வரை வவுனியா வடக்கு கல்வி அலுவலகத்தில் 5 கணக்காளர்கள், 3 வலயக் கல்விப் பணிப்பாளர்கள், 3 எழுதுநர்கள் பணியாற்றி இருந்தனர், எனினும் எவரும் மோசடியைக்கண்டுபிடிக்கவில்லை.

மோசடி 2021 கண்டுபிடிக்கப் பட்டது. அதையடுத்து 2 கோடி ரூபாய் பணத்தை மோசடி செய்தவர் உடனடியாகப் பணி இடை நிறுத்தம் செய்யப் பட்டார். அதேநேரம் அதற்குப் பொறுப்புக்கூறவேண்டிய அதிகாரிகள் எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வில்லை. அவர்கள் தொடர்பில் விசாரணைகூட நடத்தப்பட வில்லை.

இந்த மோசடி தொடர்பாக மாகாண பிரதம செயலாளரினால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு வலயத்தில் பணியாற்றிய 8 கணக்காளர்கள், 3 வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட 35 பேரிடம் இருந்து வாக்குமூலங்களைப் பதிவு செய்திருக்கிறது. எனினும் பொறுப்புக்கூறவேண்டிய அதிகார்கள் எவர் மீதும் எந்த விசாரணையும் இடம்பெற வில்லை.

2 கோடி ரூபாயை மோசடி செய்த முகாமைத்துவ சேவை அலுவலர் இப்போது தலைமறைவாகிவிட்டார். அவர் எங்கிருக்கிறார் என்பது கல்வித் திணைக்களத்திற்குத் தெரியாது. 15 லட்சம் ரூபாயை மோசடி செய்தவர், இதே மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழ் தற்போது வரையில் ஆசிரியராகப் பணியாற்றுகின்றார்.

இந்த நிதி மோசடி தொடர்பில் கொழும்பில் உள்ள லஞ்ச, ஊழல் தடுப்பு பிரிவில் முறையிடப்பட்டுள்ளது. ஆனால் அந்தப் பிரிவு மூலமும் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

மாகாணத்தின் மூத்த நிர்வாக அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் ஓர் நிணைக்களத்தில் மோசடி அல்லது களவு இடம்பெற்றால் அதற்கு திணைக்கள ரீதியில் ஓர் விசாரணையும. சட்ட ரீதியில் உடனடியாக பொலிசில் ஓர் முறைப்பாடும்பதிவுசெய்யப்பட வேண்டும்எனபதே பொதுவான ஏற்பாடு என்றார். அதனைச்செய்திருக்கின்றோம் என்கிறார்.

இவ்வாறு அரச திணைக்கள மோசடிகள் மூலம் இழக்கப்படும் நிதி மீளப்பெறப்படுவது என்பது மிக அரிதாகவே இருப்பதோடு இவற்றினை அறவிட சட்ட ஏற்பாடுகள் போதிய அளவில் இல்லை என அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர். அதற்கேற்றவகையில் சட்டத் திருத்தங்கள்மேற்கொள்ளப்படவேண்டியது மிக அவசியம்.




> “வவுனியா வடக்கு கல்வி வலயத்திலே 2013 ஏப்பிரல் முதல் 2015 மார்ச் வரையான இரண்டு ஆண்டுகளில் 15 லட்சத்து 57 ஆயிரத்து 970 ரூபாய் அங்கு பணி யாற்றிய அலுவலர் ஒருவரால் மோசடி செய்யப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான கொடுப் பனவில் இருந்து சிறு சிறு தொகை யாக வெட்டி அவற்றைத் தனது 4 வங்கி கணக்கு இலக்கங் களுக்கு வைப்புச் செய்வதன் ஊடாக அவர் அந்தப் பணத்தை கையாடல் புரிந்துள்ளார்.”


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1180/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swebpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# பல்துறைகள் சார்ந்த பெண்கள் கௌரவம்







திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல்துறை சார்ந்த 160 பெண்களை பாராட்டி கௌரவிக்கும் விழா ஹலோ ரி.வி. ஹலோ எவ்.எம். நிறுவனத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி எவ்.எம்.சரிக் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவுக்கு கிழக்கு மாகாண கல்விஅமைச்சின்செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்கா பிரதம அத்தியாகக் கலந்து சிறப்பித்தார்.

சமூகசேவை, கல்வி, மருத்துவம், விளையாட்டு, சுற்றுலாத்துறை, அழகியல்துறை, கலை, கலாசாரம், அரசமற்றும் அரசசார்பற்றதொழிற்துறைசார்ந்த பல்வேறுபட்ட பெண்கள் இவ்விழாவின் போது பாராட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (05)

## பாலர் பாடசாலை மாணவர்களின் சுகாதார மேம்பாட்டு நிகழ்வுகள்

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக பாலர் பாடசாலை மட்டங்களில் சுகாதார மேம்பாட்டை விஸ்தரிப்பது தொடர்பிலான விசேட கலந்துரையாடல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நடைபெற்றது.

பணிமனையின்சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம்.ஜே.எம். பைரூஸால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்நிகழ்வில் விசேட வளவாளர்களாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தாய் சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச் ரிஸ்பின், பொது சுகாதார பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.எம்.ஹில்மி, பிராந்திய வாய்ச் சுகாதார நிபுணர் டாக்டர் எம் எச் கே. சரூக், மாவட்ட சுகாதார கல்வி உத்தியோகத்தர் எம். ஜே.எம் பைரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். பாலர் பாடசாலைகளில் போசனை மட்டத்தை அதிகரிப்பது, வாய் சுகாதாரத்தை மேம்படுத்தி சிறுவர்களின் வாய் சுகாதாரத்தை பாதுகாப்பது, சிறார்களின் பொது சுகாதாரம் போன்றபல்வேறுவிடயங்கள் இந்த நிகழ்வின்போது கலந்துரையாடப்பட்டன.

இந்நிகழ்வில் சுகாதார வைத்திய அதிகாரிகள், பாலர் பாடசாலை பணியகத்தின் உத்தியோகத்தர்கள் மேற்பார்வை பொது சுகாதார மாதுக்கள், பாடசாலை பற்சிகிச்சை நிபுணர்கள் உள்ளிட்ட சுகா தார உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## யானைகளை லேசர் கதிர்கள் மூலம் குறிவைக்கும் திட்டமிட்ட திட்டம் கண்டி பெரகராவில் நடந்ததா?

### சன்ன ஜயசுமனவுக்கு சந்தேகம்



கண்டி தலதா பெரஹரவை சீர்குலைக்கும்வகையில் யானைகளை லேசர் கதிர்கள் மூலம் பொறி வைக்கும் திட்டமிட்ட திட்டம் உள்ளதா என்பதை ஆராயுமாறு நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்னஜயசுமனபொலிஸ்மா அதிபருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதேவேளை பௌத்த ஊர்வலங்களை சீர்குலைக்கும் மற்றும் அவமதிக்கும் வகையில் திட்டமிடப்பட்ட திட்டம் பல வருடங்களாக செயற்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (05)

## 'அஸ்வெசும' தொடர்பான விவரங்களை பெறுவதற்கு '1924' இற்கு அழைக்குக!



20 லட்சம் பயனாளிகளில், 15 லட்சம் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் வழங்கும் பணிகள் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், முதற்கட்டமாக 689,803 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் 4.395 பில்லியன் ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேநேரம் ஊனமுற்றோர், முதியோர், சிறுநீரக நோயாளர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

'அஸ்வெசும' குறித்த அனைத்துவிவரங்களையும் 1924 என்ற துரித தொலைபேசி எண் மூலம், வார நாள்களில் காலை 9 மணி முதல் 4.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். (05)

## மக்களை அச்சுறுத்தியுள்ள புலிகளின் நடமாட்டங்கள்

சில நாள்களாக நோர்டன்பிரிட்ஜ், கிரிவநெலிய, பத்தனை, டபுள்கட்டின் ஆகிய பகுதிகளில் மலை வாழ் புலிகளின் நடமாட்டம் உள்ளதால் அப்பகுதி மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

அந்தந்த கிராமங்களில் உள்ள பல கிராம மக்கள் மலை வாழ் புலிகளை பார்த்ததாகவும், பல நாய்கள் வீடுகளில் இருந்து காணாமல் போயுள்ளன எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

இச்சம்பவம் குறித்து உடனடியாக வனவிலங்கு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (05)

## போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞன் ஒருவர் யாழில் உயிரிழப்பு

யாழில் போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் திடீரென சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை பகுதியைச் சேர்ந்த குறித்த இளைஞன் அதிகளவான ஹெரோயினை ஊசி மூலம் நுகர்ந்து வந்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் வைத்திய பரிசோதனையில் இளைஞன் கிருமித் தொற்றுக்கு இலக்காகியுள்ளமை தெரியவந்துள்ளது. இதேவேளை மற்றுமொரு இளைஞனும் போதைப்பொருளுக்கு அடிமையான நிலையில், உடலில் கிருமி தொற்றுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## பொலித்தீன் பைகளை வைத்திருந்த கடைக்காரர்களுக்கு கடும் எச்சரிக்கை

நல்லூர் ஆலயம் அமைந்துள்ள பகுதியில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பைகளை வைத்திருந்த 35 கடை உரிமையாளர்களுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையால் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கடந்த 08 மாதகால பகுதியில், தடை செய்யப்பட்ட பொலித்தீன்களை வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நல்லூர் மகோற்சவ காலங்களில் ஆலய சூழலில், கச்சான் கடைகள், இனிப்பு கடைகள், காரம் சுண்டல் கடைகள் என பெருமளவான தற்காலிக கடைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அக்கடைகளில் தடை செய்யப்பட்ட பொலித்தீன் பாவனைகள் அதிகளவில் காணப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் சோதனை நடவடிக்கையில் இறங்கிய மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள் பொலித்தீன் பைகளை வைத்திருந்த 35 கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதோடு இனி வரும் நாள்களிலும் இவ்வாறு செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

## யாழில் மாவா போதைப் பொருளுடன் பாடசாலை மாணவன் ஒருவன் கைது

யாழ்.தீவகப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் மாவா போதை பொருளுடன் நேற்று (செவ்வாய்க்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த மாணவன் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் தோற்றிய நிலையில் மாவா போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருவதாக, ஊர்காவற்துறை பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது.

இந்நிலையில் குறித்த மாணவனை கைதுசெய்த ஊர்காவற்துறைப் பொலிஸார் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றனர்.

## நீச்சல் தடாகத்தில் மாணவன் சாவு இறப்பில் தாய்க்குச் சந்தேகம்

ரஜரட்ட பல்கலைக்கழக நீச்சல் தடாகத்தில் நண்பர்களுடன் நீராட சென்ற 6 மாணவர்களில் ஒரு மாணவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

முகாமைத்துவ விஞ்ஞானபீடத்தின் முதலாம்வருட மாணவர்கள் குழுவொன்றே நீச்சல் தடாகத்திற்குள் பிரவேசித்துள்ளனர்.

அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் மாணவர்கள் பாதுகாப்பற்ற முறையில் நடந்து கொண்டதன் காரணமாகவே இந்த விபத்து ஏற்பட்டதாக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் சஞ்சீவனி கினிகத்தர தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய முருகதாஸ் திலக்சன் என்பவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நீரில் மூழ்கி ஆபத்தான நிலையில் இருந்த மாணவர் மிகக் குறுகிய காலத்திற்குள் மிஹிந்தலை பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், மிஹிந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

அதேவேளை நண்பர்களுடன் நீராட சென்றபோதே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கின்ற போதிலும் தன்னுடைய மகன் புலமை பரிசில் மூலம் பல்கலைகழகம் சென்றதாக குறிப்பிட்டுள்ளதுடன் கால்பந்து விளையாட்டிலும் இம்முறை தேர்வாகியுள்ளார் என மாணவனின் தாயார் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு புனித மிக்கல் கல்லூரியின் கல்வி பயின்று ரஜரட்ட பல்கலைக்கழகத்திற்கு சென்றுள்ளார். படிப்பே குறிக்கோளாக கொண்டு இருந்த தனது மகன் உயிரிழப்பில் சந்தேகம் உள்ளதாக தாயார் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் அனுராதபுர வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சடலத்தை மட்டக்களப்புக்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் யாழ். பல்கலையில் நேற்று வெளியீடு





யாழ்.பல்கலைக்கழக ஊடகக்கற்கைகள்துறையின் அனுசரணையில், பி.விக் னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூலின் வெளியீட்டு விழா நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றது. யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில், இடம்பெற்ற இந்நிகழ்வில் ஊடகத்துறை சார்ந்தோர், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். ஊடகத்துறையில் தனது ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வை உள்ளடக்கி பி. விக்னேஸ்வரன் இந் நூலை உருவாக்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சமுர்த்தி உத்தியோகத்தர்களின் நிர்வாக பிரச்சினைகளுக்குத் தீர்வு

## பிரதமர் தினேஷ் குணவர்தன உத்தரவாதம்

எதிர்வரும்வரவுசெலவுத் திட்டத்துக்கு முன்னர் சமுர்த்தி உத்தியோகத்தர்களின் நிர்வாக பிரச்சினைகளைத் தீர்க்குமாறு பிரதமர் தினேஷ் குணவர்தன அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் அலரிமாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே பிரதமர் குணவர்தன இந்த பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.

சமுர்த்தி திணைக்களத்திற்கு உள்வாங்கப்படும் போது 44சி(11) பிரிவின் கீழ் தமது விருப்பத்தை வெளிப்படுத்திய உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய 60 வீத ஊழியர் சேமலாப பங்களப்பு நிதியை செலுத்துவதில் 4 வீத மேலதிக வட்டியை அறவிட தீர்மானித்துள்ளமை நியாயமற்றதாகும் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பதவிகள் மற்றும் ஊழியர்கள் எண்ணிக்கைக்கான அங்கீகாரம், சமுர்த்தி உத்தியோகத்தர்களை எம். என் 02 சம்பள அளவுத் திட்டத்தில் நிறுவுதல், பதவி உயர்வு முறைமையை அமைத்தல், சமுர்த்தி அபிவிருத்தி சேவைக் காலத்துடன் சமுர்த்தி ஊழியர் சேவைக் காலத்தை சேர்த்தல், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கான நிலுவைத் தொகையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கூட்டு வட்டியுடனான 4 வீத மிகை கட்டணம் போன்ற பல



விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு தடையாக உள்ள கட்டளைச் சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்கள் தொடர்பான விடயங்களை அதிகாரிகள் விளக்கியதுடன், நாடு நெருக்கடியை எதிர்நோக்கும் இத்தருணத்தில் இந்த பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வைப்பதற்கு அனைவரினதும் அர்ப்பணிப்பு அவசியம் எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

மேலும், அரச ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாதிருப்பது, செயலாற்றுகை பின்னடைவதற்கு காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (05)

# அஸ்வெசும கொடுப்பனவு; 500 கோடி ரூபா விடுவிப்பு

அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை பயனாளிகளுக்கு வழங்குவதற்காக திறைசேரி அரச வங்கிகளுக்கு 500 கோடி ரூபாவை விடுவித்துள்ளது.

மாதாந்திர நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கத் தொடங்கியுள்ள நிலையில் வங்கிகளுக்கு நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, நிதி வழங்கல் தொடர்பான பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காக அமைச்சின் அதிகாரிகளுக்கும் வங்கி அதிகாரிகளுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றது. (05)

# இந்தியாவுக்கும் தமிழர்களுக்கும் எதிராகவே கர்த்தினால் உள்ளார்

## சந்தேகம் வருகிறது என்கிறார் ஜனா எம்.பி.

இந்தியாவுக்கும் வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கும் எதிரான நிலைப்பாட்டில் பேராயர் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகை உள்ளாரா எனும் சந்தேகம் எழுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார். மட்டக்களப்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தை முன்னிட்டு வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் வடக்கில் மன்னாரிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த நாட்டில் மீண்டும் ஓர் இனக்கலவரம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சநிலை தமிழ் மக்கள் மத்தியில் உருவெடுத்திருந்தாலும் ஒவ்வொரு தேர்தல்கள் வரும் காலத்திலும் இனவாதத்தைத் தூண்டிவிட்டு அரசியல் செய்வது இந்த நாட்டில் வழமையாகிவிட்டது.

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டு வெடிப்புகளை தமக்கு சாதமாக பயன்படுத்தி தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய ஒருவர் ஜனாதிபதியாக வரவேண்டும் என்பதை பூதாகரமாக்கி ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றார்கள். எதிர்வரும் ஆண்டும் ஒரு தேர்தல் ஆண்டாகயிருக்கப் போகின்றது. இதனை மையமாகக்கொண்டு ஒரு சில இனவாதிகள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லங்களை சுற்றிவளைக்கவேண்டும் என்றும், வடக்கு கிழக்கில் பௌத்த மதத்திற்கு எதிராக தமிழர்கள் செயற்படுகின்றார்கள் என்று இனவாதத்தினை வெளிக்கிளப்பி கஜேந்திரகுமார் எம்.பியின் வீட்டுக்கு முன்பாகவும் இரண்டு தினங்களாக ஆர்ப்பாட்டங்களை செய்திருந்தார்கள். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிகின்றோம்.

வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்றால் கொழும்பில் சிங்களவர்களின் தலைநகரத்தில் தமிழர்களுக்கு என்ன வேலையென்று நாடாளுமன்ற உதயகம்பன்பில கூறுகின்றார்.

வடக்கு கிழக்கில் நீங்கள் வந்து அடாத்தாக கூடியேறுகின்றீர்கள், ஆனால் கொழும்பிலும் தெற்கிலும் தமிழர்கள் அடாத்தாக குடியேறவில்லை என்பதை கம்பன்பில போன்றவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

நீங்களே கொழும்பு சிங்கள தலை நகரம் வடக்கு கிழக்கு தமிழர்கள் தாயகம் என்றால் நாடாளுமன்றத்தில் நீங்களே வடக்கு கிழக்கினை பிரித்து எங்களை தனிநாடாக பிரகடனப்படுத்திவிட்டால் எல்லோருக்கும் அதுவசதியாக இருக்கும். - என அவர் மேலும் குறிப்பிட்டார். (05)

# பொலிஸாருக்கு எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்



வவுனியாவில் கடந்த திங்கட்கிழமை பொலிஸாருக்கு எதிராக, பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் முன்பாக மக்கள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தியாவுக்கு பௌத்தர்களை யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி பணமோசடி செய்த நபரை மக்கள் பிடித்துகொடுத்தும், வவுனியா பொலிஸார் அவர்களை விடுவித்துள்ளனர் எனத் தெரிவித்தே பாதிக்கப்பட்டவர்களால் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கண்டியைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு 20 இற்கும் மேற்பட்டவர்களிடம் ஆளுக்கு தலா ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா வீதம் பெற்றுக் கொண்டு தலைமறைவாகியுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், கடந்த 18 ஆம் திகதி குறித்த நபர் வவுனியா குடிவரவு குடியகல்வு திணைக்களம் முன்பாக நின்றுள்ள நிலையில் அவரால் பாதிக்கப்பட்ட சிலர் அவரைப் பிடித்து வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்துள்ளபோதும் அவர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொலிஸாரின் இந்தச் செயலைக் கண்டித்தே பாதிக்கப்பட்டவர்களால் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாதிக்கப்பட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில் -

தம்மை ஏமாற்றிய நபரை பொலிஸார் உடனடியாகக் கைது செய்து தமது பணத்தையும், கடவுச்சீட்டையும் பெற்றுத் தரவேண்டும். பொருளாதார நெருக்கடிக்குமத்தியில் நாம் சிறுகச்சேர்த்த பணத்தை சுற்றுலாவை நம்பி கொடுத்து ஏமாந்துள்ளோம். ஏமாற்றியவரை நாம் பிடித்து கொடுத்தும் பொலிஸார் அவரை விடுவித்துள்ளனர். எமக்கு தேவை எமது பணமும் கடவுச் சீட்டுமே. அதனை பொலிஸார் பெற்றுத் தர வேண்டும். - இவ்வாறு தெரிவித்துள்ளனர். (05)



# வடிவழகன் வேலவன் மஞ்சமதில் வருகிறான்!



மஞ்சமதில் அமர்ந்து மால்மருகன் வருவான்
வெஞ்சமரில் வெற்றி சூடியவன் வருவான்
தஞ்சமென நின்றால் தாங்கியவன் நிற்பான்
வஞ்சமனம் போக்க வைத்திடுவான் முருகன்

நீலமயில் ஏறும் வேலவனாம் முருகன்
ஓலமிடு அடியார் உளமுணர்ந்து வருவான்
ஆலகால முண்ட அரனாரின் மைந்தன்
அடியார்கள் அழைத்தால் அரவணைக்க வருவான்

சாத்திரமும் ஆவான் தோத்திரமும் ஆவான்
சகலகலா வல்லவனாய் வேலவனும் இருப்பான்
அடியார்கள் பாட்டுக்கு அவனாடி வருவான்
அமரர்கள் துயர்களைந்த அப்பனே முருகன்

அருணகிரி தமிழருந்தி ஆனந்தம் அடைந்தான்
ஆலாகால முண்டார்க்கு ஆசானாய் அமைந்தான்
பழனிமலை மீதிலே ஆண்டியாய் அமர்ந்தான்
பணிந்திடுவார் யாவருக்கும் பழமாவான் முருகன்

நல்லூரன் மஞ்சம் வீதிவரும் வேளை
எல்லோரும் இணைந்து மஞ்சமதை இழுப்பார்
கல்லான மனமும் கனியாக மாற
நல்லூரின் முருகன் மஞ்சமதில் வருவான்

வடிவழகன் வேலவன் மஞ்சமதில் வருகிறான்
தனதடியார் துயர்களைய தானவனும் வருகிறான்
உருகிவிடு மடியார்கள் தமைமறந்து நிற்கிறார்
அருளிடவே வேலவன் மஞ்மதில் வருகிறான்





மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மிழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.08.2023இல் வெளியிடப்பெற்றது.